# பெரம்பலூர் நகராட்சி

**2020ம் ஆண்டு ஜீன் மாதம் 31.08.2020 ம் தேதி திங்கள்கிழமை மாலை 4.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : திரு . S. குமரி மன்னன். தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31.08.2020 | **பொருள் 01 :** பெரம்பலூர் நகராட்சி ஆணையர் அவர்களது ஆகஸ்ட்– 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்த் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 366<br>பதிவு செய்யப்பட்டது |
| 31.08.2020 | **பொருள் 02 :** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள் அடிக்கடி பழுதாகி வருவதால் மின்மோட்டார்களை உடனுக்குடன் பழுது சீர் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி மின் மோட்டார்களை பழுது சீர் செய்ய ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் : 000263/2020/இ1 | நகர்மன்றத் தீர்மான எண். 367<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2020 | **பொருள் 03 :** இந்நகராட்சியின் **பொது நிதி 2020- 2021** ஆம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 மற்றும் 4 ல் உள்ள ஆலாம்பாடி , ஒடச்சகுளம் பகுதியில் உள்ள திறந்த வெளி கிணற்றினை ஆழப்படுத்தும் பணிக்கு 13.08.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**மதிப்பீடு தொகை : 9.90 இலட்சம்** | நகர்மன்றத் தீர்மான எண். 368<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. முகமது இக்பால் ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>873789</td><td>(–) 0.12% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>G. கண்ணன் , ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>876414</td><td>0.18 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
அ.கு.<br>
1. மேற்கண்ட பணிக்கு திரு. முகமது இக்பால் பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–) 0.12%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண் :004311/2020/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.08.2020</td>
<td>
பொருள் 04 : இந்நகராட்சியின் பொது நிதி 2020- 2021Mம் ஆண்டு நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 மற்றும் 11 ல் உள்ள துறைமங்கலம் ITI பின்புறம் , சித்தர் கொட்டகை பகுதியில் உள்ள திறந்த வெளி கிணற்றினை ஆழப்படுத்தும் பணிக்கு 13.08.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
மதிப்பீடு தொகை : 9.85 இலட்சம்
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்களின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. முகமது இக்பால், ஒப்பந்ததாரர் , பெரம்பலூர்</td><td>866465</td><td>(–) 0.26% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>G. கண்ணன் , ஒப்பந்ததாரர், பெரம்பலூர்</td><td>871840</td><td>0.36 % மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
அ.கு.<br>
1. மேற்கண்ட பணிக்கு திரு. முகமது இக்பால் பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட (–)0.26%, குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண் : 004312/2020/இ1
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 369 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.08.2020</td>
<td>
பொருள் 05 : இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொள்ளிடம் கூட்டு குடிநீர் மற்றும் திறந்த வெளி கிணறுகள் மூலம் வழங்கப்படும் தண்ணீர் ஆகியவற்றில் திரவ குளோரின் மூலம் தண்ணீர் கலந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது திரவ குளோரின் அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதாலும் மேலும் COVID -19 itu° bjh‰W nehŒ gâ¡fhf ga‹gL¤jnt©o cŸsjhš மேற்படி இருப்பில் வைத்துக்கொள்ளரூ9.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அ.கு<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண். 005094/2020/ இ1
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 370 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.08.2020 | **பொருள் 06 :** இந்நகராட்சிக்கு சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவு நீர் நிலையத்திற்கு உள்ளவரும் நீர் மற்றும் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வெளியேற்றிய நீர் ஆகியவற்றை பரிசோதனை செய்து ஆய்வு செய்த வகையில் தமிழ்நாடு மாசுகட்டுபாடு வாரியம் அரியலூர் அவர்களிடமிருந்து மேற்படி ஆய்வு மேற்கொண்டதற்கான ஆய்வு கட்டணம் ரூ.78830/-ஐ செலுத்திட வேண்டி கேட்பு வரப்பட்டுள்ளது. (கடித எண் ARY/0326/Rs/RoA/DEE/TNPCB/ARY/2020 நாள். 21.08.2020) எனவே மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ. 78830/- ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அ.கு**<br>அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 12973/2018/இ1 | நகர்மன்றத் தீர்மான எண். 371 அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2020 | **பொருள் 07 :** இந்நகராட்சியில் 110 பணியாளர்களை 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பெற்று பொதுசுகாதார பணியினை தனியார் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.407/பி3/2016, நாள்.02.02.2016–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.5113/2015/எச்1, நாள்.22.08.2016-ல் 110 பணியாளர்களை 01.09.2016 முதல் ஓராண்டு காலத்திற்கு M/s.Green Land Engineering Works Limited என்ற நிறுவனத்தின் மூலம் வழங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.838 நாள். 05.08.2016 -ல் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி, நிறுவனத்தின் ஒப்பந்தப்பணி ஓராண்டு காலம் முடிவுற்ற நிலையில் மேற்படி, நிறுவனத்தின் துப்புரவு பணி திருப்திகரமாக இல்லை என்பதால் இரண்டாம் ஆண்டிற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற ஒப்புதல் பெற்று இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.8934/2017/எச்1, நாள்.06.09.2017–ன்படி 07.09.2017 முதல் 06.09.2018 முடிய முதல் ஓராண்டு காலத்திற்கு Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டது.<br>அதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மானம் எண்.105, நாள்.20.08.2018–ன்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.8934/2017/எச்1, நாள்.06.09.2018-ன்படி 07.09.2018 முதல் 06.09.2019 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்படி, நிறுவனத்திற்கு அனுமதி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. மேற்படி 110 பணியார்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்ட 3 ஆண்டு காலம் முடிவுற்ற நிலையில் துப்புரவு பணியின் அத்தியாவசியம் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.16 நாள்.30.09.2019 ல் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.8934/2017/எச்1, நாள்.05.09.2019–ன்படி மேற்படி 110 பணியார்களை 07.09.2019 முதல் 06.03.2020 முடிய மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.291, நாள்.28.02.2020–ல் 07.03.2020 முதல் மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டு Our Land Engineering Works Private Limited Chennai நிறுவனத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி, நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிகாலம் 06.09.2020 ல் முடிவடையவுள்ளது . | நகர்மன்றத் தீர்மான எண். 372 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 231 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி நியமனம் செய்வதற்கான நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.2397/2020/எச்1 நாள். 29.05.2020ன் மூலம் முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1228/2020/அ3 நாள்.22.06.2020ன்மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மேலனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவு எதிர்நோக்கும் நிலையிலுள்ளது.<br>தற்சமயம் கொரோனா வைரஸ்–19 நோய் உலகலாவிய தொற்று நோயாக அறிவிக்கப்பட்டுள்ளதால் கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணி மிகவும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. பொது சுகாதாரம் பணியின் அவசரம் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பாதுகாப்பு– தடுப்பு முன்னெச்சரிக்கையின் அத்தியாவசத்தை கருதி மேற்படி 110 பணியாளர்களை மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மறுநியமணம் செய்து உத்திரவு பிறப்பிக்கப்படும் நாள்வரை ஏற்கனவே, ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு அதே விலைவிகிதத்தில் நீடிப்பு செய்து தர சம்மதம் பெற்று இந்நகரின் பொதுசுகாதாரம் பணியினை தங்கு தடையின்றி மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.<br>மேற்படி துப்பரவு ஆய்வாளர்களின் அறிக்கையின்படி புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் நியமனம் செய்திடும் வரை 110 பணியாளர்களை ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலை விகிதத்தில் வழங்க சம்மதம் இருப்பின் அதனை எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு இவ்வலுவலக ந.க.எண்.8934/2017/எச்1 நாள். 20.08.2020–ன் தேதிய அறிவிப்பின்படி தற்போதைய ஒப்பந்ததாரரான Our Land Engineering Works(Pvt)Ltd என்ற நிறுவனத்திற்கு அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.<br>மேற்படி Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனம் 24.08.2020–ம் தேதிய தனது கடிதத்தில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செயல்முறை உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளின்படி அதே விலைவிகிதத்தில் ஒப்பந்நதபுள்ளி கோரி மேற்படி பணியாளர்களை நியமனம் செய்திடும் வரை ஏற்கனவே அளித்த விலை விகிதம் மற்றம் அதில் காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 110 பணியாளர்களை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளனர் தற்சமயம் கொரோனோ வைரஸ்-19 தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் வழக்கமான பொது சுகாதார பணிகள் பாதிக்காமல் தங்கு தடையின்றி மேற்கொள்ளுவதற்கும் இப்பணியின் அத்தியாவசியம் கருதி மேலும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் நியமணம் செய்யப்படும் காலம் வரை ஏற்கனவே உள்ள விலை விகிதம் மற்றும் நிபத்தனைகளின்படி 110 பணியாளர்களை Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பெற்று தங்குதடையின்றி பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>துப்புரவு ஆய்வாளர்களின் அறிக்கையில் இந்நகராட்சியில் வழக்கமான துப்புரவு பணிகள் தங்கு தடையின்றி மேற்கொள்ளவும் தற்போது கொரோனா வைரஸ் தடுப்ப பாதுகாப்பு முன்னெச்சரிக்கை பணியினை மேற்கொள்ளவும் 110 பணியார்களின் பணி தேவை அத்தியாவசியமாக உள்ளதால் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை நியமனம் செய்திடும் வரை ஏற்கனவே அளிக்கப்பட்ட விலை விகிதம் மற்றும் அதில் காணும் நிபந்தனைகளின்படி | |

தற்போதைய ஒப்பந்ததாரர்கள் மூலம் 110 பணியாளர்களை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளஅறிக்கை சமர்த்ப்பித்துள்ளனர். எனவே பொது சுகாதார பணி மற்றும் கொரோனா வைரஸ் -19 தடுப்பு பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணியின் அவசர அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டும் பொதுசுகாதார பணிகள் தடையின்றி நடைபெறும் வகையிலும் மேற்படி துப்புரவு ஆய்வாளர்களின் குறிப்பின்படியும் மேற்படி நிறுவனம் ஏற்கனவே கொடுத்துள்ள விலைவிகிதம் மற்றும் அதில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணியார்களை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை நியமனம் செய்திடும் காலம் வரை ஏற்கனவே வழங்கி வரும் விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு 07.09.2020 முதல் 110 பணியாளர்களை வழங்கிட தற்போதைய நிறுவனமான Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.8934/2017/எச்1,</u>

---

31.08.2020

**பொருள் 08 : 1920**ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், பிரிவு **15** ன் கீழ் ஆகஸ்ட்**–2020**ம் மாதத்தில் மேற்கொண்ட செலவினங்கள் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>தொகை வழங்கப்பட்ட பட்டியல்</u>**

| **வ. எண்** | **தொகை வழங்கப்பட்ட தேதி/ Section 15 page No** | **பணி விபரம்** | **பட்டியல்எண் / தேதி** | **தொகை ரூ** |
|---|---|---|---|---|
| 01 | 28.07.2020/62 | COVID-19 காரணமாக வார்டு எண். **12** மற்றும் **13** ல் கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்காலிக தடுப்பரன் அமைக்கும் பணி . ROC.No.3397/2020/E1 | CJV/20-21/ RF0042 dt: 28/07/2020 | 1,34,641 |
| 02 | 31.07.2020/63 | COVID-19 தொடர்பாக கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் வாங்கப்பட்டது. ROC.No.3531/2020/H1 | PJV/20-21/ RF0032 dt: 31/07/2020 | 4,40,678 |
| | | | **கூடுதல்** | **5,75,319** |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

<u>ந.க.எண்.2384/2020/பி1.</u>

நகர்மன்றத் தீர்மான எண். **373** பதிவு செய்யப்பட்டது

| | | |
|---|---|---|
| 31.08.2020 | **பொருள் 08 :** இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு தடுப்பு நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதங்களின் மூலமாகவும் ஆய்வுக்கூட்டத்தின் வாயிலாகவும் பெரம்பலூர், சுகாதார பணி துணை இயக்குநரின் ந.க.எண்.3072/அ4/2019, நாள்.03.06.2020-ம் தேதிய கடிதத்தின் மூலமாகவும் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு, சிக்கன்குனியா நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழு ஒழிப்புபணி, புகைமருந்து அடிக்கும்பணி மற்றும் கிருமிநாசினிகள் தெளிப்பதற்கும் ஒரு வார்டுக்கு 2 களப்பணியாளர்கள் வீதம் 42 களப்பணியாளர்களை தற்காலிகமாக நியமித்து கொசுப்புழுக்களின் அடர்த்தி மற்றும் காய்ச்சல் ஆகியவற்றை தொடர் கண்காணிப்பு செய்து கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இந்நகர்மன்ற திர்மான என். 324 நாள் **30.06.2020** ன்படி **42** களப்பணியாளர்களை **60** நாட்களுக்கு நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படி டெங்கு கொசுபுழு ஒழிப்பு பணி நியமனம் **60** தினங்கள் முடிவடைய உள்ளது .<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.13433/2018/ஜே1, 17.09.2018-ம் தேதிய கடிதத்தில் டெங்கு, சிக்கன்குனியா மற்றும் இதர நோய் பரவுவதை தடுக்கும் பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு பணியினை தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பணிக்காக நாள் ஒன்றுக்கு 50 வீடுகளுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு (மஸ்தூர்) பணியாளர் என்ற அடிப்படையில் (DBC Worker) ஒப்பந்த (Out Sourcing) முறையில் அந்தந்த நகராட்சிகளின் நிர்வாக அனுமதி வரம்பிற்கு உட்பட்டு உரிய விதிமுறைகளை பின்பற்றி பணியமர்த்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக நியமிக்கும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையிலான தொகையினை வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது மழைக்காலம் தொடங்கிருப்பதால் நகரில் டெங்கு காய்ச்சல் வராமலும் மற்றும் பரவாமலும் இருக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய கட்டாய சூழ்நிலை உள்ளதால் மேலும் **89** நாட்களுக்கு களப்பணியாளர்களின் பணி மிக அவசியமாக உள்ளது எனவும் கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக ஒரு வார்டுக்கு **2** பணியாளர் வீதம் **21** வார்டுக்கும் **42** களப்பணியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்தி கொள்ளலாம் எனவும் இப்பணிக்காக தேவைப்படும் பணியாளர்களை தற்சமயம் இப்பணியில் ஈடுபட்டு வரும் பணியாளர்கள் டெங்கு ஒழிப்பு பணிகளை திறம்பட செய்துவருவதாலும். இங்கராட்சி ஒப்பந்தபணியாளர்களை வழங்கிவரும் OurLand Engineering Works Chennai என்ற நிறுவனத்தின் மூலம் தினக்கூலி ms;டிப்படையில் களப்பணியாளர்களை பழைய விலைவிகிதத்தில் பெற்று பணிகள் மேற்கொண்டால் செலவினம் குறையும் என்பதால் மேற்படி நிறுவனத்திடம் பணியாளர்களைப் பெற்று டெங்கு ஒழிப்பு பணியை மேற்கொள்ளலாம் என துப்புரவு ஆய்வாளர்கள் தமது 20.08.2020-ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் இப்பணியின் அவசர அவசியம் கருதி 42 களப்பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் வழங்கிட சம்மதம் கோரி Our Land Engineering Works Chennai நிறுவனத்திற்கு அறிவிப்பு கடிதம் அனுப்பியதில் மேற்படி நிறுவனம் **24.08.2020–ம்** தேதிய கடிதத்தில் 42 களப்பணியாளர்களை **89** நாட்களுக்கு பழைய விலை விதிதத்தில் வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.<br><br>இந்நகராட்சியில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு நாளொன்றுக்கு 42 களப்பணியாளர்கள் வீதம் **89** நாட்களுக்கு தினக்கூலி அடிப்படையில் அமர்த்தும் நிலையில் **89 (**42X337 = 14154 X 89 = 1259706/-) தோராயமாக | நகர்மன்றத் தீர்மான எண். 374 அனுமதிக்கப்பட்டது |

ரூ.1260000/—(ரூபாய் பணிரெண்டு இலட்சத்து அறுபது ஆயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் துணை இயக்குநர், பொதுசுகாதார பணிகள் அவர்களின் ந.க.எண்.3072/அ4/2019, நாள்.03.06.2020-ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு டெங்கு, சிக்கன்குனியா மற்றும் கொரோனோ வைரஸ் தொற்றுநோய் பரவாமல் இருக்க தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு 89 நாட்களுக்கு 42 தினக்கூலி பணியாளர்களை ஏற்கனவே ஒப்பந்தப்பணியாளர்களை பொதுசுகாதாரப்பிரிவிற்கு வழங்கிவரும் Our land Engineering Works Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1260000/-க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2762/2020/எச்1.

// ஒம் // திரு . S. குமரி மன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி